Verified RealEstate™

RE REGULATORY RECORD

# RERA Document

The document as the regulator published it, reproduced in full behind this page.

Published for reference. The authority's own register is the operative record.

Verified RealEstate™
3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai 600 097, India

hello@verified.realestate
+91 9996 12 9996
verified.realestate

DIGITALLY VERIFIED RECORD

அனுப்புநர்
S. தனராசு, பி.இ.,
உதவி இயக்குநர் / நகர் ஊரமைப்பு
துணை இயக்குநர் (பொ),
செங்கல்பட்டு மண்டலம்,
13, வரதராசனார் தெரு,
வேதாசலம் நகர், செங்கல்பட்டு -1
ddcglregion@gmail.com

பெறுநர்
ஊராட்சி மன்றத் தலைவர்,
வளர்புரம் ஊராட்சி,
திருப்பெரும்புதூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

நக.எண். 5236/2012/செம3, நாள். 28 .11.2013

அய்யா,

பொருள் மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வளர்புரம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.215/2D, 3B, 6C, 7A3, 7B, 8, 9A, 10A, 216/1A1C, 1A2, 1B1, 4C, 5C பரப்பு 5.45 ஏக்கர் இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் - தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் - சம்பந்தமாக.

பார்வை 1. மனுதாரர் M/s.Shriram Properties Pvt Ltd அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்.02.11.2013

2. ஊராட்சி மன்றத் தலைவர், வளர்புரம் ஊராட்சி அவர்களின் கடிதம் நாள்.06.11.2012

3. வட்டாட்சியர், திருப்பெரும்புதூர் வட்டம் அவர்களின் கடிதம் மூ.மு.எண். 5125/2012/அ1, நாள்.02.08.2012

4. மனுதாரர் M/s.Shriram Properties Pvt Ltd அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்.09.10.2013 (தானப்பத்திர நகல் மற்றும் ஊராட்சி மன்றத் தீர்மானம் பெறப்பட்டது)

5. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதம் இதே எண் நாள்.08.11.2013 (நன்னிலைவரி கட்டணம் செலுத்தக் கோரியது)

6. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.14619/ 1988/பிசிசி, நாள்.27.04.1988

7. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.40483/ 2000/எல்ஏ1, நாள்.07.11.2002

8. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.16985/ 2000/எல்ஏ2, நாள்.29.09.2007

9 அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சித் துறை நாள்.16.06.2003

10. மனுதாரர் மனுதாரர் *M/s.Shriram Properties Pvt Ltd* அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்.21.11.2013 (நன்னிலைவரி கட்டணம் செலுத்திய விவரம்)

★★★★★★

1. காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வளர்புரம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.215/2D, 3B, 6C, 7A3, 7B, 8, 9A, 10A, 216/1A1C, 1A2, 1B1, 4C, 5C பரப்பு 5.45 ஏக்கர் இடத்தில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்கு பார்வை ஒன்று மற்றும் இரண்டில் கண்ட கடிதங்களுடன் பெறப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

அனுப்புநர்
S. தனராசு, பி.இ.,
உதவி இயக்குநர் / நகர் ஊரமைப்பு
துணை இயக்குநர் (பொ),
செங்கல்பட்டு மண்டலம்,
13, வரதராசனார் தெரு,
வேதாசலம் நகர், செங்கல்பட்டு -1
ddcglregion@gmail.com

பெறுநர்
ஊராட்சி மன்றத் தலைவர்,
வளர்புரம் ஊராட்சி,
திருப்பெரும்புதூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

நக.எண். 5236/2012/செம3, நாள். 28 .11.2013

அய்யா,

பொருள் மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வளர்புரம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.215/2D, 3B, 6C, 7A3, 7B, 8, 9A, 10A, 216/1A1C, 1A2, 1B1, 4C, 5C பரப்பு 5.45 ஏக்கர் இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் - தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் - சம்பந்தமாக.

பார்வை 1. மனுதாரர் M/s.Shriram Properties Pvt Ltd அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்.02.11.2013

2. ஊராட்சி மன்றத் தலைவர், வளர்புரம் ஊராட்சி அவர்களின் கடிதம் நாள்.06.11.2012

3. வட்டாட்சியர், திருப்பெரும்புதூர் வட்டம் அவர்களின் கடிதம் மூ.மு.எண். 5125/2012/அ1, நாள்.02.08.2012

4. மனுதாரர் M/s.Shriram Properties Pvt Ltd அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்.09.10.2013 (தானப்பத்திர நகல் மற்றும் ஊராட்சி மன்றத் தீர்மானம் பெறப்பட்டது)

5. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதம் இதே எண் நாள்.08.11.2013 (நன்னிலைவரி கட்டணம் செலுத்தக் கோரியது)

6. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.14619/ 1988/பிசிசி, நாள்.27.04.1988

7. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.40483/ 2000/எல்ஏ1, நாள்.07.11.2002

8. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.16985/ 2000/எல்ஏ2, நாள்.29.09.2007

9 அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சித் துறை நாள்.16.06.2003

10. மனுதாரர் மனுதாரர் *M/s.Shriram Properties Pvt Ltd* அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்.21.11.2013 (நன்னிலைவரி கட்டணம் செலுத்திய விவரம்)

★★★★★★

1. காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வளர்புரம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.215/2D, 3B, 6C, 7A3, 7B, 8, 9A, 10A, 216/1A1C, 1A2, 1B1, 4C, 5C பரப்பு 5.45 ஏக்கர் இடத்தில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்கு பார்வை ஒன்று மற்றும் இரண்டில் கண்ட கடிதங்களுடன் பெறப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

2. இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **மவ/நஊதுஇ(செம)எண்.236/2013** என எண்ணிடப்பட்டு இரண்டு தொகுப்புகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3. மேலும் பார்வை 6, 7 மற்றும் 8-ல் கூட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதங்களில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. பார்வை 9-ல் கூட்டியுள்ள அரசாணையின்படி சாலைகளை மனுதாரரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெற்றும், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளை செய்து மனைப்பிரிவு முழுமையாக அபிவிருத்தி செய்து அதனை உள்ளாட்சிக்கு ஒப்புடைத்த பின்னரும், மேலும் மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும், இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை 19(இ),19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்படவேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5. மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனைஎண்.19 (ஈ)-ன்படி இவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms No.71 RDLA dated 16.06.2003 and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.

7. பார்வை 4-ல் கண்ட ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் கடிதம் மூலம் ஊராட்சி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் இடத்தினை தனி புலஉட்பிரிவு பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

8. EWS மனைகள் பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஆகும். இம்மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது.

9. உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் உள்ளாட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா? என்பதை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய பொறியாளர் / வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்த தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

29/11/13

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),
செங்கல்பட்டு.

29/11/13

29/11/13

இணைப்பு:
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் (2நகல்கள்)

நகல்:

1. M/s.Shriram Properties Pvt Ltd
   Lakshmi Neela Rite Choice Chamber,
   1st floor, New No.9, Bazullah Road, T.Nagar, Chennai – 17

2. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2
   அவர்களுக்கு மனைப்பிரிவு வரைபடம் மற்றும்
   மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு
   மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

வளர்புரம் ஊராட்சி

கோப்பு எண்.5236/2013/செம3

---

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. அ. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு **மவ/நஊதுஇ(செம)எண்.236/2013** என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக் கற்கள் வரையறுக்கப்படவேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் ஊராட்சி கட்டிட விதிகள் 3(5)-ன்படி ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கேற்ப சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரரால் நிர்வாக அதிகாரியால் (Executive Authoriy) நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்படவேண்டும்.

   ஆ. அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால் துப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகள் நிர்வாக அதிகாரியின் கருத்திற்கேற்ப மனுதாரர் அமைத்து தரவேண்டும்.

   இ. நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

   ஈ. அங்கீகரிக்கப்பட்ட இம்மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / உரிமையாளர் முறையாக அமைத்து அல்லது அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்திற்கு உரிய படிவத்தில் பதிவு செய்து பொதுச் சாலையாக பாராமரிக்க ஊராட்சி மன்றத் தலைவருக்கு தானமாக ஒப்படைக்க வேண்டும்.

   உ. மேற்படி சாலைகளை பொதுச் சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு கட்டணத் தொகையை பெறும் வகையில் பத்திரத்தில் மனுதாரரின் கையொப்பம் பெறப்படவேண்டும்.

2. இருசாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்படவேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகை விடவோ, வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். இதில் கடை, பண்டகச் சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

5. விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்படவேண்டும். ஒரு பக்கம் இணைந்து வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக் கூடாது.

6. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டிட வரம்பு விடப்படவேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7மீட்டர் (23அடி) சாலைக்கு 1.50 மீட்டரும் (5அடி), 9மீ (30அடி) அகல வரையிலான சாலைக்கு 3.0மீட்டரும் (10அடி) 12 மீட்டருக்கு (40அடிக்கு) மேல் மற்றும் 15மீட்டர் (50அடி) அகலத்திற்குற்குட்பட்ட சாலைகளுக்கு 3மீட்டர் (10அடியும்) 15மீட்டர் (50அடி) அகலத்திற்கும். மேலும் 21மீட்டர் (70அடி) அகலத்திற்குட்பட்ட சாலைகளுக்கு 4.5மீட்டர் (15அடியும்) 21மீட்டர் சாலைக்கு (70 அடி) மேல் 24 மீட்டரும் (80அடி) அகலம் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6மீட்டர் (20அடி) என்ற அளவில் கட்டிட வரம்பு விடப்படவேண்டும். ஊராட்சி கட்டிட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.8மீட்டர் (6அடி) மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளின்படி 2.4மீட்டர் (8அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச் சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டிடமோ சுவரோ கட்டுதல் கூடாது.

7. மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5மீ அளவுகள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3மீ திறவெளி விடப்படவேண்டும். 10மீ வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத் திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5மீ விடப்பட வேண்டும்.

8. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3மீ அளவுகள் திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்தப் பின்பக்கத் திறவெளியில் கிணறு, கழப்பறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்துவண்டி நிறுத்தம், கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லது ஆனால் அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம். ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3மீட்டர் / 3.75மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

9. விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50 அல்லது 67 விழுக்காட்டிற்கு மேல் கட்டிடம் கட்டப்படக்கூடாது. கட்டிடம் விடப்படும் திறந்தவெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்புரவாக பராமரித்தல் வேண்டும்.

10. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்படவேண்டும்.

11. கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமம்படுத்தவோ நிலச்சரிவை சரி செய்யவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்துதலோ கூடாது.

12. 9மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்தது 9மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

13. மனுதாரர் மனைப்பிரிவு தொடர்பாக ஊராட்சித் தலைவரிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெறவேண்டும்.

14. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்துகொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபேயாகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.

15. கோவில், தேவாலயம், மதூதி ஆகியவற்றிக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம் / இடங்கள் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்படவேண்டும். இதனை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

16. பூங்கா, சிறுவர் விளையாடுமிடம், திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்க வேண்டும்.

17. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின் கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால் கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றியமைக்க வேண்டும்.

18. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலம் ஊராட்சி மன்றத் தலைவர் உடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துக் கொள்ள வேண்டும். மனைகள் விற்க்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செய்யப்படவேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாக சேர்க்கப்படவேண்டும்.

19. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில் நுட்ப ஒப்புதல் (Technical Approval) மட்டுமே வழங்கப்பட்டு உள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இடஉரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்படவேண்டும்.

ஆ. தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

இ. மனைப்பிரிவு இடம் 1984 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப் பிரிவு 4(1)-ன்படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி பரிசீலனை செய்ய பின்னரும் நில உச்சவரம்புச் சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதற்காக ஊராட்சி மன்றத் தலைவர் மனநிறைவு அமைந்த பின்னரேதான் மனைப்பிரிவிற்கு ஊராட்சி மன்றத்தில் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஈ. மேற்படி மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும்.

உ. மேலும் மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப் பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதனையும் மனநிறைவு அடைந்த பின்னரேதான் மனைப்பிரிவிற்கு ஊராட்சி மன்றத் தலைவர் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படவேண்டும்.

20. மனுதாரர் வளர்புரம் ஊராட்சி மன்றத் தலைவரிடம் வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மான எண்ணும், நாளும் மன்றத்திற்கும், மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்படவேண்டும்.

21. தமிழ்நாடு வீட்டு வசதி மனைப்பிரிவு மனையின் பரப்பு 110 சதுர மீட்டருக்கு குறைவாக இருந்தால் கட்டிட விதிகள் மட்டுமே பொருந்தும்.

22. நிலவங்கி என்று ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை அரசாணை எண்.139, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 14.09.1993-ன்படி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்படவேண்டும்.

23. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நிலஉரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையின் நிலஉரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

24. நில உரிமை குறித்த வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

25. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்பந்தப்பட்ட இடத்தில் 6 அடி x 4 அடி என்ற அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்படவேண்டும்.

26. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் மனைப்பிரிவு வரைபடம் நகல் வழங்கப்படவேண்டும்.

27. EWS மனைகள் பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஆகும். இம்மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விவரம்

| ஒதுக்கீடு விவரம் | | அளவுகள் | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | -- | 5.45 ஏக்கர் (237402.00 ச.அடி) | – |
| ஒதுக்கிய மனைகள் | -- | 89 [65 முதல் 87 வரை ] | |
| | | EWS மனைகள் (15230.0 ச.அடி) | --- |
| பூங்கா | -- | 24430.00 ச.அடி | 10.29% |
| திறவிடம் | -- | -- | -- |
| சிறுவர் விளையாடுமிடம் | - | -- | -- |
| கடை | -- | 2500.00 ச.அடி | 1.05 % |
| உத்தேச சாலைகள் | -- | --- | -- |
| பொது உபயோகம் | -- | -- | -- |
| நடுநிலைப் பள்ளி / சிறுவர் பள்ளி | - | -- | -- |

29/11/13

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),
செங்கல்பட்டு

29/11/13

29/11/13

# வளர்புரம் ஊராட்சி

மாவட்டம் : காஞ்சிபுரம்
வட்டம் : திருப்பெரும்புதூர்
உள்ளாட்சி : வளர்புரம்
கிராமம் : வளர்புரம்
நி.அ.எண்கள் : 215/2D, 3B, 6C, 7A3, 7B, 8, 9A, 10A, 216/1A1C, 1A2, 1B1, 4C (மு) 5C-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.
அளவு : 1" = 66'-0"
கோப்பு எண் : 5236/2012, சை.ம.3

**குறிப்பு:**

மனைப்பிரிவின் மொத்தப் பரப்பு: 5.45 ஏக்கர் (மு) 237402 ச.அடி
கோரிய மனைகள் : 93
ஒதுக்கிய மனைகள் : 89 [65 முதல் 87 வரை EWS மனைகள்]
EWS மனைகளின் பரப்பு : 15230.0 ச.அடி
நிலையமுள்ள சாலை : _____ --- _____
மனைப்பிரிவு எல்லை : _____ --- _____

**பொது ஒதுக்கீடுகள்:** [உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டியது]

பூங்கா : 24430 ச.அடி - 10.29%
உத்தேச சாலை : 78299 ச.அடி - 1.05%
கடை (மதிப்பீடு) : 2500 ச.அடி - 1.05%

| | கட்டிட வரம்பு | மூலை முடக்கு |
|---|---|---|
| 40'-0" சாலைக்கு | 10'-0" | 10'-0" x 10'-0" |
| 30'-0" சாலைக்கு | 10'-0" | ~~5'-0" x 5'-0"~~ |
| 23'-0" சாலைக்கு | 5'-0" | 5'-0" x 5'-0" |

**நிபந்தனைகள்:**


1. இம்மனைப்பிரிவுக்கு ஊராட்சி தலைவர் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடம், எந்த துறையாலும் நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்படியல் மாவட்ட வருவாய்த் துறை அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. அரசாணை எண். ~~71, வணிக வளர்ச்சித்துறை நாள். 16-06-03~~ ன் படி பூங்கா மற்றும் சாலை ஒதுக்கீடுகளை உள்ளாட்சியே தான முகப்பு வாங்கிக்கொண்டு பராமரிக்க வேண்டும் என்றும், நில உரிமம் குறித்த உள்ளாட்சியே முழுப்பொறுப்பு என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானதையல்ல என அறியப்பட்டால் இம் மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. இவ்வுடன்படிக்கைத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு மனைகள் வாங்கும் பொருட்டு மனுதாரருக்கும் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும்.
5. இவ்வுடன்படிக்கைத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை வாழ்மக்கள் பார்வைக்காக சம்பந்தப்பட்ட இடத்தில் 6'-0" x 4'-0" என்ற அளவுக்கு குறையாமல் காங்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.
6. EWS மனைகள் பொருளாதாரத்தில் மன்தங்கியவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள். இம்மனைகளை ஒருங்கிணைக்கவோ, மாற்றி அமைக்கவோ கூடாது.

ம.வ/ந.ஊ.து.இ(செ.ம)எண். 2369/2013

வளர்புரம் ஊராட்சி தீர்மானம் எண் 24
நாள் 21.1.2013 ன் படி கட்டிட வரை பட நிபந்தனைகளுடன்
அனுமதி வழங்கப்பட்டது.
கட்டிட வரைபட அனுமதி எண் _____
நாள் _____ அனுமதி காலம் _____ முதல்
_____ வரை

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
செங்கல்பட்டு மண்டலம்,
செங்கல்பட்டு - 603 001.

தலைவர்
53, வளர்புரம் ஊராட்சி மன்றம்
திருப்பெரும்புதூர் ஒன்றியம்.




அளவர்/உதவி வரைவாளர் 29/11/13

வரைவாளர் நிலை-III 29/11/13

திட்ட உதவியாளர் 29/11/13

THE LANDLENS SUITE

# Eight ways to know a piece of land before you pay for it.

This report covers one part of the picture. These cover the rest, drawn from the same government records, for any property in Tamil Nadu.

### LandLens One
Ask anything about a property and get an answer grounded in live government records, with the sources shown.
**/landlens/one**

### Verify My Land
Every record check run on one property and returned as a single report.
**/landlens/verify-my-land**

### Legal Opinion
An advocate's written opinion on the title, built on the records we pull for it.
**/landlens**

### One Map
Every layer on one map: the parcel, its boundary, zoning, water bodies and what sits around it.
**/landlens/one/map**

### PriceMap
What land actually changed hands for around this plot, taken from the registered deeds.
**/landlens/pricemap**

### Build Scope
What you are allowed to build here: floor space, height, coverage and setbacks.
**/landlens/build-scope**

### Property Tracker
Watch a property and hear about it when something new is registered against it.
**/landlens/property-tracker**

### Deal Room
Run the transaction in one place: documents, stamping, signatures and the parties.
**/landlens/deal-room**

FREE TOOLS · NO ACCOUNT NEEDED

# Twenty-four checks you can run yourself, at no cost.

## Records and verification

The registers themselves, read for you.

- Encumbrance Certificate
- Patta and Chitta
- Field Measurement Sketch
- EC Analyzer
- Bank charge check
- Court case search
- Seller background check
- Approval check by survey

## Value and duty

What it is worth and what it costs to register.

- Guideline value by street
- Guideline value by survey
- Stamp duty and registration fees
- Capital gains
- Floor space index
- Area unit converter

## Zoning and land use

What the plan says can happen on this land.

- Land use zone finder
- CMDA land use check
- Coastal regulation zone
- Master plan check
- Water bodies finder
- Airport height clearance

## Registers and directories

Who holds it, and which office keeps the record.

- Find your registering office
- Temple property check
- Waqf property check
- RERA register

**Every free tool**
/tools

**Services we run for you**
/services

**The LandLens suite**
/landlens/one

Verified RealEstate™

# Every claim in this document traces back to a government record.

- Legal opinions, due diligence and title verification
- Building plan, layout and sub-division approvals
- Completion and occupancy certificates, regularisation
- Escrow, negotiation and NRI property management
- Land survey, soil testing, architecture and construction

**Verified RealEstate**
3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai 600 097, India
**hello@verified.realestate**
+91 9996 12 9996

Prepared from the registers named on the page each finding sits on. Where a register could not be read, this document says so in its place rather than leaving the gap to be read as a clean result.